40

# வலுசர்ப்பம் எதையாவது சமீபத்தில் கொன்றீர்களா?

## (12:7-12)

*முதலாம் உலகப்போர் மூண்டபோது, இலண்டனில் உள்ள யுத்தப் பணிக்குழு, ஆப்பிரிக்காவில் சென்று சேர இயலாதிருந்த பிரிட்டன் நாட்டின் புறநிலையம் ஒன்றிற்கு அடையாளச் சொற்களால் ஆன செய்தி ஒன்றை அனுப்பிற்று. யுத்தம் அறிவிக்கப்பட்டது. "உங்கள் மாவட்டத்தில் உள்ள அந்நியர்களான எல்லா விரோதிகளையும் கைது செய்யவும்" என்பதே செய்தியாக இருந்தது. இதற்கு அந்தப் பணிக்குழு தவறாத பதில் ஒன்றைப் பெற்றது: "பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஆறு பேர்களையும், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த நான்கு பேர்களையும், பிரெஞ்சு நாட்டை சேர்ந்த நான்கு பேர்களையும், இத்தாலி நாட்டைச் சேர்ந்த இருவரையும், ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த மூவரையும், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள்ளோம். நாம் யாருடன் யுத்தம் செய்கின்றோம் என்பது பற்றித் தயவுசெய்து உடனடியாக அறிவுரை வழங்கவும்."[1] நாம் யுத்தம் செய்யும்போது, விரோதி யார் என்று அறிதல் நமக்கு உதவுகிறது!*

*அதிகாரம் 12ன் மீதான படிப்பை நாம் துவங்குகையில், பிசாசானவன் - இந்த அதிகாரத்தில் பெரிய சிகப்பான வலுசர்ப்பம் என்று குறிப்பிடப்பட்டுள்ளவன் - நமது ஆவிக்குரிய விரோதியாக இருக்கின்றான் என்று நாம் வலியுறுத்தினோம். நமது விரோதி வெற்றிகொள்ளப்பட முடியாதவன், பயங்கரம் நிறைந்தவன், சலிப்புற்றவன் மற்றும் உக்கிரமானவன் என்று நாம் கண்டோம். நமது தற்போதய வசனப்பகுதியில், ஒவ்வொரு திருப்பத்திலும் இவன் தொடர்ந்து முறியடிக்கப்படும்போது அவனுடைய சலிப்பும் உக்கிரமும் அதிகரிக்கிறது. உண்மையில், நம்முடைய வசனப்பகுதி, சாத்தான் ஒரு தோற்கடிக்கப்பட்ட விரோதியாய் இருக்கிறான் என்று காட்டுகிறது - அவன் தோற்கடிக்கப்படுவான் என்றல்ல, ஆனால் அவன் ஏற்கனவே தோற்கடிக்கப் பட்டுவிட்டான் என்று.*

*12:7-12ல், சாத்தானின் தோல்வியானது முதலில் அடையாளங்களில் காணப்படுகிறது. பின்பு விரிவான பாடலிலும் கொண்டாடப்படுகிறது. இந்த வசனங்கள், சாத்தானின் விடாப்பிடியான போக்கின்மீது தோல்வியின் செயல்விளைவைக் காண்பிக்கின்றன.*

# *பிசாசினுடைய தோல்வியின் உண்மைநிலை (12:7-9)*

*வசனப்பகுதி பின்வருமாறு தொடங்குகிறது,*

> *வானத்திலே[2] யுத்தமுண்டாயிற்று, மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங் கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப் படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது, அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள் (வசனங்கள் 7-9).*

**இவ்வசனப்பகுதி எதைக் கூறுவதில்லை**

*இவ்வசனப்பகுதி எதைப் போதிக்கிறது என்று நாம் கலந்துரையாடுவதற்கு முன்பு, இது எதைப் போதிப்பதில்லை என்பதை நாம் சுட்டிக்காண்பித்தாக வேண்டும். விழுந்துபோன தூதர்களைப் பற்றிய இறையியல் கொள்கையொன்றைப் போதித்தல் என்பது இவ்வசனப்பகுதியின் நோக்கமல்ல.[3] ‘‘பிரபலமான கிறிஸ்தவ ஆர்வ இலக்கியங்கள் ... மிகாவேலினால் நடத்திச் செல்லப்பட்ட தேவ தூதர்கள், சாத்தானுடனும் அவனது தூதர்களுடனும் யுத்தம் செய்து மனிதன் உண்டாக்கப்படுவதற்கு நீண்டகாலம் முன்னதாகவே அவர்களைப் பரலோகத்தில் இருந்து வெளியேற்றியதாகச் சித்தரித்துள்ளன.’’[4] பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தக் கோட்பாடு வெளிப்படுத்தின விசேஷம் 12ல் இருந்த கருத்தை எடுத்துக்கொண்டுள்ள, Paradise Lost[5] என்ற மில்ட்டன் என்பவரின் இலக்கியநூல் மூலமாகப் பிரபலப்படுத்தப்பட்டது. எல்லிஸன் என்பவர், “குறைந்தபட்சம் இவ்வசனப்பகுதியிலேயேயாவது, இதற்கு வேதவசனரீதியான உறுதிப்பாடு எதுவும் இல்லை, விவரிக்கப் பட்டுள்ளதென்பது வெளிப்படுத்தின விசேஷத்தின் நிகழ்ச்சிகளின் அளவெல்லைக்குள்ளாக இருப்பதாகவும், அதன் வாசகர்களைப் பாதிப்பதாகவும் உள்ளது”[6] என்று கூறினார். ரே சம்மர்ஸ் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,*

> *இந்தப் பத்தியானது, பழைய ஏற்பாட்டின் மறைபொருளின் வசனப்பகுதிகள் அல்லது மில்ட்டனின் Paradise Lost என்ற புத்தகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய வகையில் விளக்கப்படுவதற்கு மாறாக, வெளிப்படுத்தின விசேஷத்தின் சந்தர்ப்பப் பொருளிலேயே விளக்கப்பட வேண்டும். இது பிசாசின் தொடக்கநிலை மற்றும் அந்த நிலையில் இருந்து அவன் வீழ்ச்சியடைதல் ஆகியவற்றின் வரலாற்றுப் பூர்வமான விபரமாயிருப்பதில்லை; இது, கிறிஸ்துவையும் அவரது மக்களையும் அழிப்பதற்கு பிசாசின் முயற்சிகள் பற்றிய சித்தரிப்பை*

முன்வைப்பதற்கான இறைவெளிப்பாட்டு உருவகமாக உள்ளது.[7]

சாத்தானின் தோற்றம் பற்றி நாம் வியப்படையலாம், ஆனால் "மறைவானவைகள்" மத்தியில் உள்ள விபரங்கள் (உபாகமம் 29:29) நமக்கு வெளிப்படுத்தப்படத் தகுதியானவைகள் என்று தேவன் காணவில்லை - இது ஒருவேளை, நாம் அதைப் புரிந்து கொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றோம் என்பதால் இவ்வாறு இருக்கலாம். மற்றும் நிச்சயமாகவே, இது நமது மீட்புக்கு அவசியமில்லை என்பதால் இவ்வாறு இருக்கிறது. இந்தப் பாடக்கருத்துப் பற்றி வேதாகமம் தருகிற சில குறிப்புக்களின்மீது நீங்கள் ஆர்வமாய் இருந்தால், அவைகள் கீழே தரப்படுகின்றன.

தேவன் சகலத்தையும் படைத்தார் என்பதால் (எபேசியர் 3:9), பிசாசானவன் தேவனாலேயே படைக்கப்பட்டிருக்க வேண்டும். இவன் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக (எபேசியர் 6:11, 12), ஒரு வேளை ஒரு தூதனாகப் படைக்கப்பட்டான் (2 கொரிந்தியர் 11:14). இவன் இறுமாப்பினால் "ஆக்கினையில் விழுந்தான்" என்று 1 தீமோத்தேயு 3:6 குறிப்பிடுகிறது, ஆனுல் விபரங்கள் தரப்படுவதில்லை. யோவான் 8:44ம் வசனம், இவன் ''ஆதிமுதற் கொண்டு மனுஷகொலைபாதகனுயிருக்கிறான்'' என்று கூறுகிறது, மற்றும் 1 யோவான் 3:8, இவன் "ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்" என்று கூடுதலாகக் கூறுகிறது. துரதிஷ்டவசமாக நாம், இந்த "ஆதிமுதல்" என்பது "இவன் படைக்கப்பட்ட உடனே" என்பதையா அல்லது "இவன் பாவம் செய்யத் தொடங்கியபோது'' என்பதையா அல்லது ''மனிதன் இருக்கத் தொடங்கிய வேளை" என்பதையா, எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை அறிவதில்லை. கடைசியாக, விழுந்துபோன தூதர்களைப் பற்றி வேதாகமம் நமக்குக் கூறுகிறது (2 பேதுரு 2:4; யூதா 6); ஆனால் இவர்கள் பிசாசுடன் ஏதாவது உறவு கொண்டிருந்தனரா, அது எப்படிப்பட்ட உறவு என்பது பற்றி வேதாகமம் நமக்குக் கூறுவதில்லை.[8]

வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், நமக்கு ஆவல் காண்பித்து ஏங்கசெய்யப் போதுமான தகவல்களை நாம் கொண்டுள்ளோம் ஆனால் நமது ஆர்வத்தை நிறைவு செய்யப் போதுமான தகவல்களை நாம் கொண்டிருப்பதில்லை. இந்த வெறுமையான இடங்களை நிறைவு செய்ய மனிதர்கள் தங்கள் கற்பனையைப் பயன்படுத்தியிருப்பதில் வியப்பெதுவும் இல்லை. இருந்தபோதிலும், வெளிப்படுத்தின விசேஷம் 12ம் அதிகாரமானது, ''படைப்புக்கு முன்னர் சாத்தானும் அவனது தூதர்களும் பரலோகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்ற எவ்விதமான உண்மையோ அல்லது கற்பனையுடன் எந்தத் தொடர்போ, கொண்டிருப்பதில்லை."[9] இது துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களை ஊக்குவித்தல் என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

இவ்வசனப்பகுதியை நாம் நெருங்கிக் காண்பதற்கு முன்னர் இன்னொரு எதிர்மறையான விஷயத்தையும் நமது வழியில் இருந்து எடுத்துப் போட வேண்டியுள்ளது. யுத்தக்காட்சிக்குச் சற்று முன்னர், ஆண் பிள்ளையானது ''தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்

*தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது'' (12:5). தோல்வியை ஒப்புக்கொள்ள மனவிருப்பம் இல்லாத வலுசர்ப்பம், அந்தப் பிள்ளையைப் பரலோக வாசல்கள் வரையிலும் துரத்தியதாக சில விளக்கவுரையாளர்கள் சித்தரிக்கின்றனர். அங்கு அவனது வழியை மிகாவேல் தடுத்து விட்டதாகவும், அது யுத்தத்தை விளைவித்ததாகவும் அவர்கள் கூறுகின்றனர். வலுசர்ப்பம் தோற்கடிக்கப்பட்டுப் பூமிக்குத் திருப்பித் துரத்திவிடப்பட்டது. இந்தக் காட்சியானது 12ம் அதிகாரத்தின் பிரிவுகளை ஒன்றிணைத்து, நாடகத்திற்குப் பொருளைக் கூட்டுகிறது, இது இவ்வதிகாரத்தின் முற்றான போதனைக்குப் பெரிய பங்கம் எதையும் ஏற்படுத்துவதில்லை. இருப்பினும் இந்த அணுகுமுறைக்குச் சந்தர்ப்பப் பொருளில் உள்ள பல விபரங்கள் நேர்மாறுபடுகின்றன:*

*முதலாவது (மற்றும் மிக முக்கியமாக), 12:11ன் படி, ''ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தின்'' மூலமாகவே வெற்றி பெறப்பட்டது. இரத்தம் என்பது "இவ்வதிகாரத்தின் மிக இன்றியமையாத கூற்றாக உள்ளது"[10] என்ற G. R. பீஸ்லே-முர்ரே என்பவரின் கூற்றை நான் ஒப்புக்கொள்கின்றேன். இது இவ்வசனப்பகுதி முழுவதிலும் ஒளிசிந்துகிறது. இரத்தத்தின் மூலம் வெற்றி பெறப்பட்டதால், மற்றும் சிலுவையில் இரத்தம் சிந்தப்பட்டதால், வலுசர்ப்பம் [கிறிஸ்துவின்] பரத்துக்கேறுதலுக்குப் பின்பு அல்ல, ஆனால் அதற்கு முன்பே தோல்வியடைந்திருக்க வேண்டும். நாள் வரிசை முறைமையின்படி, வலுசர்ப்பமானது, பிள்ளை ''எடுத்துக் கொள்ளப்படுவதற்கு" முன்பாகவே "தள்ளப்பட்டது."*

*வலுசர்ப்பம் மற்றும் அவனது தூதர்களின் தோல்வியின் விளைவாக, "வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று" (வசனம் 8) என்பதையும் கவனிக்கவும். இது, பிசாசானவன் வானத்தில் "நுழைய" அவசியம் என்று கண்டிருக்க மாட்டான் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது; மாறாக, 8ம் வசனம் வரைக்கும், அவன் அங்கு ''ஒரு இடத்தை'' கொண்டிருந்தான். இது, மேலேறிச்சென்ற பிள்ளையை வலுசர்ப்பம் துரத்திற்று என்ற காட்சிக்கு பொருந்தி வருவதில்லை.*

*7முதல் 9வரையுள்ள வசனங்களின் "யுத்தம்'' என்பது, சிலுவையில் கிறிஸ்து பாடுபட்ட ஆறுமணி நேரங்களில் காட்சிக்குப் பின்னால் சம்பவித்த ஆவிக்குரிய போராட்டம் என்று நான் நம்புவதற்குச் சந்தர்ப்பப்பொருள் என்னை வழிநடத்துகிறது. இயேசுவின் சிலுவை மரணம் அவனது மாபெரும் வெற்றியாகப் போகிறது என்று பிசாசானவன் நினைத்தான், ஆனால் அது அவனுக்கு மாபெரும் தோல்வியாக மாறியது.*

*7முதல் 9வரையுள்ள வசனங்களை நாம் பார்க்கும்போது, 12:11ஐச் சிந்தையில் வையுங்கள்.*

### இவ்வசனப்பகுதி எதைக் கூறுகிறது

*''வானத்திலே யுத்தமுண்டாயிற்று'' என்று வசனம் 7அ கூறுகிறது, இருப்பினும் இந்த யுத்தம் எப்போது உண்டாயிற்று என்று இது கூறுவதில்லை. இது இயேசு சிலுவையில் இருந்தபோது உண்டாயிற்று என்ற கருத்தைத் தள்ளிவைப்பதற்கு எதையும் கொண்டிருப்பதில்லை.*

"மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்" (வசனம் 7ஆ). மிகாவேல் ஒரு பிரதான தூதனாக இருக்கின்றார். உண்மையில் இவர் ஒருவர்தாம் புதிய ஏற்பாட்டில் பிரதானதூதன் என்று அழைக்கப்படுகின்றார் (யூதா 9).[11] "தூதன்" என்பதற்கு முன்னால் உள்ள "பிரதான" என்ற வார்த்தையானது "மேலான" என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. இவர் உயர்ந்த பதவி வகிக்கும் ஒரு தூதன் என்பதும் இவர் தமக்குக் கீழ் தூதர்களைக் கொண்டுள்ளார் என்பதும் மறைவான அர்த்தமாக உள்ளது. இவ்விதமாக, 7ம் வசனம், "அவனைச் சேர்ந்த தூதர்களும்" - அதாவது அவரது கட்டளையின்கீழ் இருக்கும் தூதர்கள் - என்று உரைக்கிறது.

மிகாவேலின் பெயர், "தேவனைப் போன்றவர் யார்?" என்று அர்த்தப்படுகிறது. தானியேலின் புத்தகத்தில், மிகாவேல் தேவனுடைய மக்களைத் தற்காப்பவராக சித்தரிக்கப்பட்டார் (தானியேல் 10:13, 21; 12:1). இவர் மோசேயின் சரீரத்தைக் குறித்துப் பிசாசினிடத்தில் தர்க்கம் செய்தது பற்றிய புலனாகாத குறிப்பு ஒன்று யூதா 9ல் உள்ளது. அந்தத் தர்க்கத்தில் அடங்கியிருந்தது என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளாதிருக்கலாம்,[12] ஆனால் இவ்வசனமானது, சாத்தானுடன் போராட்டம் என்பது மிகாவேலுக்கு புதியது அல்ல என்பதையாவது நாம் அறிய அனுமதிக்கிறது.[13]

"வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணி"னர் (வசனம் 7இ). இது மும்முரமான யுத்தமாக இருந்தது. யுத்தம் ஒன்றில்லாமல் வலுசர்ப்பம் சரணடையவில்லை (மற்றும் சரணடைவதில்லை). இவனும் இவனது கூட்டாளிகளும், தங்களின் நித்திய முடிவானது பணயத்தில் இருந்தது என்று அறிந்தனர்.

இருப்பினும், "அவர்கள் போதிய அளவு பலம்வாய்ந்தவர்களாய் இருக்கவில்லை" (வசனம் 8அ). நமது முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, பிசாசானவன் வெற்றிகொள்ளப்பட முடியாதவனாக இருக்கின்றான், ஆனால் இவன் தேவனாக இருப்பதில்லை. இவன் சர்வவல்லமையுடையவனாகவோ, எல்லாம் அறிந்தவனாகவோ அல்லது எங்கும் நிறைந்தவனாகவோ இருப்பதில்லை; இவனது பலம் தேவனுடைய பலத்துடன் பொருந்த முடியாது. விசேஷமாக, இவனது பலம் சிலுவையின் பலத்துடன் பொருந்த முடியாது என்பதை இவ்வசனப்பகுதி போதிக்கிறது. இது நமக்கு மீண்டும் 12:11அ வசனப்பகுதியை நினைவூட்டுகிறது: "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் ... அவனை ஜெயித்தார்கள்."

சாத்தானுடைய தோல்வியைப் பற்றிக் கலந்துரையாடும்போது, பல எழுத்தாளர்கள் "சகல வாக்குத்தத்தங்களுக்கும் தாய்" என்ற ஆதியாகமம் 3:15ஐக் கொண்டுவருகின்றனர். வெளிப்படுத்தின விசேஷம் 12 "[ஆதியாகமம்] 3:15ஐ அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது மிகவும் தெளிவு: ஒரே விதமான பண்புகள் இரண்டிலும் காணப்படுகின்றன; ஒரே சத்தியம்தான் இவ்விரண்டிலும் அறிவிக்கப்படுகிறது" என்று வில்லியம் ஹென்ரிக்ஸென் என்பவர் உறுதிப்படுத்தினார்.[14] ஆதியாகமம் 3:15ல் தேவன் சர்ப்பத்தை சபிக்கையில், "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள்

வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.'' சர்ப்பம் என்பது பிசாசுக்கு நிற்கையில் (வெளிப்படுத்தின விசேஷம் 12:9ஐக் காணவும்), "அவள் வித்து" என்பது கிறிஸ்துவைப் பற்றிய குறிப்பாக இருந்தது (கலாத்தியர் 4:4).[15] கிறிஸ்து ''குதிங்காலில்'' நசுக்கப்படுவதை (வேதனைமிக்க ஆனால் மேலோட்டமான காயத்தை)த் தாங்கி நிலைநின்று, சாத்தானின் "தலையை" நசுக்குவார் (மரணத்திற்கு ஏதுவான காயம்) என்று இவ்வசனப்பகுதி போதிக்கிறது. சிலுவையின் இந்தப் பக்கத்தில் இருந்து, இவ்வாக்குத்தத்தத்தைக் கண்ணோக்குகையில், இவ்வசனமானது இயேசு சிலுவையில் மரித்தபோது (குதிங்கால் நசுக்கப்படுதல்[16]), அவர் பிசாசின் வல்லமையையும் அதிகாரத்தையும் அழிப்பார் (தலை நசுக்கப்படுதல்) என்பதற்கான வாக்குத்தத்தமாக இருப்பதைக் காணுகின்றோம். இவ்விதமாக, ஜான் ஸ்டாட் என்பவர் பிசாசின் தோல்வியைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

> தேவகுமாரன் (பூமிக்கு) வருகை தந்த நிகழ்ச்சியில், இவனை (பிசாசை) தூக்கியெறிதல் தொடங்கிற்று, அவர் மீது இவன் "பிடி எதையும்" கொண்டிருந்தது இல்லை (யோவான் 14:30). "பிசாசினுடைய கிரியைகளை அழித்தல்'' என்பது (கிறிஸ்துவின்) தோன்றுதலுக்கு வெளிப்படுத்தப்பட்ட நோக்கமாக இருந்தது (1 யோவான் 3:8). இதை அவர் தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றினால் மேன்மையாக நிறைவேற்றினார்.[17]

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு, ''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது *மரணத்தினாலே* அழிக்கும்படிக்கு" மாம்சத்தில் வந்தார் என்று கூறினார் (எபிரெயர் 2:14). இயேசு மரித்தபோது அவர், ''துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்" என்று பவுல் உறுதிப்படுத்தினார் (கொலோசெயர் 2:15; வசனம் 14ஐக் காணவும்). இயேசு இப்பொழுது, "பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" என்று பேதுரு எழுதினார் (1 பேதுரு 3:22).

இயேசுவின் பாடுகளின் மாலை வேளையில்தான் பிசாசின் கடைசிக் கொலைச் செயல் இருந்தது,[18] அவ்வேளையில் இயேசுவைக் கொலை செய்யும்படி, யூத மற்றும் ரோம அதிகாரிகளைப் பிசாசு தூண்டிவிட்டான். சாத்தான் கிறிஸ்துவை சிலுவையில் கண்ணுற்றபோது, தான் வெற்றி பெற்றதாக நினைத்து இருப்பான் - ஆனால் பிசாசானவனால் அவரை நீக்கிப்போட இயலாதிருந்தது.[19] சாத்தான், பிலாத்துவினுடைய நீதிமன்றத்தில் தீர்ப்பை வென்றிருக்கலாம், ஆனால் தேவன் உயிர்த்தெழுதலில் முடிவை திருப்பிவிட்டார்![20]

நாம் நமது வசனப்பகுதிக்குத் திரும்புவோம். இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் விளைவாக, "வானத்தில்

அவர்கள் (சாத்தானும் அவனது தூதர்களும்) இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று" (வசனம் 8ஆ). இவ்வசனப் பகுதியானது, மனிதன் படைக்கப்படுவதற்கு முன்பு, பிசாசு நீண்டகாலங்களாக ஒரு மேன்மையான தகுதிநிலையை இழந்து போயிருந்தான் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக இது, பொல்லாங்கின் சக்திகள் தோல்வியடையச் செய்யப்பட்டுள்ள நிலையையும், மனிதகுலத்தின்மீது பிசாசின் அதிகாரம் குறைக்கப்பட்ட நிலையையும் குறிப்பிடுவதற்கான அடையாளத்துவ வழிமுறையாக உள்ளது. ஹோமர் ஹெய்லீ என்பவர், "போராட்டத்தில், சாத்தான் தோல்வியடைந்து மனிதர்களைக் கட்டுப்படுத்தும் தனது உயர்வான கரங்கொண்ட நிலையில் இருந்து கீழே தள்ளப்பட்டான்" என்று எழுதினார்.[21]

பிசாசின் வஞ்சிக்கும் திறமை என்பது இவனது வல்லமை குறைக்கப்பட்ட ஒரு பகுதியாக உள்ளது. 9ம் வசனத்தில் நமக்கு, "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற ... சாத்தான் ... தள்ளப்பட்டது" என்று கூறப்படுகிறது. இருளில் வஞ்சித்தல் என்பது எளிதாக உள்ளது - ஆனால் சுவிசேஷம் சென்றுள்ள இடங்களில் எல்லாம், பலருடைய இருதயங்களில் இருந்து இருளானது வெளியே தள்ளப்பட்டுள்ளது. இதை நான் எழுதிக்கொண்டிருக்கையில், மாயாஜாலவித்தை காட்டும் உள்ளூர் குழுவினர், ஒரு மேடைக் காட்சிக்குத் தயார் செய்து கொண்டுள்ளனர். உடையணிந்து ஒத்திகை பார்க்கும் நிகழ்ச்சியின்போது, சில செயல்விளைவுகளுக்கு வெளிச்சத்தைப் பரிசோதித்தல் என்பது நாம் செய்யும் செயல்களில் ஒன்றாக உள்ளது. சில தந்திரங்கள் மங்கிய வெளிச்சத்தில் செய்யப்பட வேண்டும் என்று நான் கூறுகையில், மிகவும் பாதுகாக்கப்பட்ட இரகசியம் எதையும் நான் வெளியிட்டுவிடவில்லை என்று நான் நினைக்கிறேன். அந்தச் செய்முறைகளின்போது ஒளிவீசும் விளக்குகள் அழிவுக்குரியவைகளாக இருக்கும் - இது பிசாசின் நோக்கங்களுக்கு சுவிசேஷமானது அழிவுக்குரியதாக இருப்பது போன்றதாகும்.

இருப்பினும் சந்தர்ப்பப் பொருளானது, சாத்தான் கீழே தள்ளப்படுதல் என்ற குறிப்பானது அடிப்படையில், குற்றம் சுமத்துவதற்கான அவனது திறனைக் குறிக்கிறது என்று சுட்டிக்காண்பிக்கிறது: வெற்றியானது பாடலில் கொண்டாடப்பட்டபோது, பரலோகத்தின் குரலானது, "இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப் பட்டுப்போனான் ... ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" (12:10ஆ, 11அ) என்று அறிவித்தது.

நமது முந்திய பாடத்தில் நாம், பிசாசு நம்மைக் குற்றம் சாட்டுகின்றவனாக இருக்கின்றான் என்ற உண்மையைக் கலந்துரையாடுகையில், யோபுவுக்குத் தேவன் செய்திருந்தவற்றின் நிமித்தமாகவே, அவர் தேவனைச் சேவித்தார் என்பதே, சாத்தான் யோபுவின் மீது சுமத்திய குற்றச்சாட்டாக இருந்தது என்று நான் குறிப்பிட்டேன். அவ்வாறே, பிசாசானவன் தேவனுடைய மக்களை

“இரவும் பகலும்” தொடர்ந்து குற்றம் சாட்டுகின்றான். அவன் இதை ஒருக்காலும் விட்டொழிப்பது இல்லை; அவன் விடுமுறையொன்றும் எடுத்துக்கொள்வதில்லை. நேர்மையானவர்களின் விழுதல்களைச் சுட்டிக்காண்பிப்பதில் அவனது பெருமகிழ்ச்சி இருந்துள்ளது, ஆனால் சிலுவையானது, உண்மையுள்ளவர்களுக்கு எதிராக குற்றம்சாட்டுதல்களில் இருந்து “கொடுக்கை” நீக்கிப் போட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, இதை ஒரு பிரசங்கியார், பரலோகத்தில் ஒரு நீதிமன்றக் காட்சியைச் சித்தரித்ததின்மூலம் இதை விவரித்ததை நான் கேட்டேன். நியாயாதிபதியாகிய தேவனுடைய விசாரணைக்கு முன்பாக ஒரு கிறிஸ்தவர் நின்றுகொணடிருந்தார். வாதியின் தரப்பு வழக்கறிஞனான பிசாசானவன், இந்தக் கிறிஸ்தவர் எவ்வகையிலெல்லாம் குற்றப்பட்டிருந்தார் என்பதைக் காண்பிக்க, தவறுகளின் நீண்டதொரு பட்டியலை விரித்து வைக்கையில், இந்தக் கிறிஸ்தவர் முகம் வெளுத்துப்போனார். பின்பு பிரதிவாதியின் தரப்பு வழக்கறிஞரான இயேசு நின்றார். குற்றம் சாட்டப்பட்டவரின் பக்கமாக அவர் வந்து, அவர்மீது தமது கரங்களைப் போட்டு, “அந்த மீறுதல்கள் யாவற்றிற்கும் ஏற்கனவே தண்டம் செலுத்தப்பட்டாயிற்று. இம்மனிதரின் பாவங்களுக்காக நான் மரித்தேன்!” என்று கூறினார். நீதிபதி தமது மரச்சுத்தியலை மேஜையின்மீது தட்டி ஒலியெழுப்பி, “(இவர்மீது) குற்றம் இல்லை!” என்று அறிவிக்கின்றார்.

இந்தக் கதை கற்பனையானது, ஆனால் இவ்வகையான கற்பனையுருவான நீதிமன்றம் வேதவசனங்களில் காணப்படுகிறது. தேவன் “யாவருக்கும் நியாயாதிபதியாக” இருக்கின்றார் (எபிரெயர் 12:23). நாம் பாவம் செய்யும்போது, “நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்” (1 யோவான் 2:1). உண்மையில், “குற்றம்சாட்டுபவன்” என்ற சொற்றொடர், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், நீதிமன்றங்களில் பிறர் மீது குற்றம் சாட்டுவதைப் பிழைப்பாகக் கொண்டவர்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் பட்டது.[22] இவ்விதமாக G. B. கேயர்டு என்பவர், “மிகாவேலுக்கும் சாத்தானுக்கும் இடையிலான யுத்தத்தை இராணுவச் சொற்றொடர்களில் யோவான் சித்தரித்தாலும், அது எதிரெதிர் ஆலோசனைகளுக்கு இடையிலான சட்டப்பூர்வமான யுத்தமாகும் ...” என்று எழுதினார். பின்பு அவர், இந்த சட்டப்பூர்வமான யுத்தமானது, “அவர்களில் ஒருவர் தகுதியிழந்தவராகுதலை விளைவித்தது” என்று கவனித்துள்ளார்.[23] J. W. இராபர்ட் என்பவர், இந்த விளைவை இதே போன்ற சொற்றொடர்களில் தொகுத்துரைத்தார்: “வாதியின் தரப்பு வழக்கறிஞன் பரலோக நீதிமன்றத்தில் பணிசெய்வதற்கான தனது உரிமையை (இழந்தான்).”[24]

ரோமர் 8ம் அதிகாரம், சகோதரர்கள் மீது குற்றம் சாட்டும் திறனை சாத்தான் இழந்தது பற்றிய மிகச் சிறந்த விளக்கவுரையாக உள்ளது:

> ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.

*...தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக் குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே (வசனங்கள் 1, 31-34).*

CEV வேதாகமம், *33 மற்றும் 34ம் வசனங்களைப் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளது: "தேவன், தாம் தெரிந்து கொண்டவர்கள் தமக்கு ஏற்புடையவர்களாய் இருக்கின்றனர் என்று கூறினால், அவர்கள்மீது* [*பிசாசு உட்பட*] *எவராவது குற்றம் சாட்ட முடியுமா? அல்லது யாராவது* [*சாத்தான் உட்பட*] *அவர்களை ஆக்கினைத் தீர்ப்பிட முடியுமா? முடியாதே! தேவனு டைய வலது புறத்தில் வீற்றிருக்கின்ற கிறிஸ்துவானவர் நமக்காக அவரிடத்தில் பேசுகின்றார்." இராபர்ட் மவுன்ஸ் என்பவர் கூறியபடி, "நீதிமான்களுக்கு எதிரான பிசாசின் குற்றச்சாட்டுகள் இரவும் பகலும் தொடருகின்றன. ஆனால், கிறிஸ்துவின் மரணம் என்ற உண்மை நிலையில், இவன் (பிசாசு) தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் (ரோமர் 8:33, 34) மீது வெற்றிகரமாய்க் குற்றம் சாட்ட இயலாதவனாக இருக்கின்றான்."*[25] *"வெற்றிகரமாய்" என்ற வார்த்தையை அடிக்கோடிடுங்கள். ஓ, ஆமாம், உண்மையுள்ளவர்கள் மீது, பிசாசானவன் இன்னமும் குற்றம் சாட்டுகிறான், ஆனால் "தேவன் தமது மக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை இனியும் கவனிக்க மாட்டார், ஏனெனில் அவை மன்னிக்கப்பட்டுள்ளன."*[26] *எல்லிஸன் என்பவர் இரத்தினச் சுருக்கமாக இதைக் கூறியபடி, இயேசுவின் மரணம் "சாத்தானின் வாயை மூடிற்று!"*[27]

*சாத்தானின் ஆவிக்குரிய "பணிநீக்கப்பட்ட நிலை," 9ம் வசனத்தில் அடையாளத்துவமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது: "*உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது, அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.*"*[28] ("மிகாவேல், பெரிய வலுசர்ப்பத்தைப் பூமியில் தள்ளுதல்" *என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*சாத்தான் தோற்கடிக்கப்பட்டுள்ளான். இது இவன் இனியும் செயல்துடிப்புள்ளவனாக இருப்பது இல்லை என்று அர்த்தப்படுவதில்லை; இது, இனி போராட வேண்டிய யுத்தங்கள் எதுவும் இல்லை என்று அர்த்தப்படுவதில்லை. "கிறிஸ்தவர்கள் ... வெற்றியை நோக்கிச் செயல்படுவதில்லை, ஆனால் ஏற்கனவே பெறப்பட்ட வெற்றியிலிருந்து செயல்படுகின்றனர்!"*[29]

## *பிசாசின் தோல்விக்கான காரணம் (12:10-12)*

*10 முதல் 12 வரையுள்ள வசனங்கள் சாத்தானின் தோல்விகளைக் கொண்டாடுகின்றன. யோவான், "அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி ..." என்று எழுதினார் (வசனம் 10அ). இந்த "பெரிய சத்தம்" பரலோகத்தின் பாடற்குழுவினரிடமிருந்து வந்தது.*[30]

### *வெற்றியின் கனிகள்*

*குரலானது முதலில் வெற்றியின் கனிகளைப் பற்றி அறிவித்தது: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது" (வசனம் 10ஆ). ''இரட்சிப்பு,'' ''வல்லமை,'' ''இராஜ்யம்,'' மற்றும் ''அதிகாரம்'' என்ற சொற்றொடர்கள், கற்பனையில் உருவான, எதிர்காலத்தில் கிறிஸ்துவின் பூமிக்குரிய ஆளுகையைக் குறிப்பதில்லை, ஆனால் இது இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் உடனடியான விளைவுகளைக் குறிக்கிறது: அவரது மரணம் இரட்சிப்பைச் சாத்தியமாக்கிற்று (ரோமர் 5:9; மாற்கு 16:15, 16ஐக் காணவும்). இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர், ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 28:18). உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று, கிறிஸ்துவின் இராஜ்யம் பலத்தோடே வந்தது (மாற்கு 9:1; நடபடிகள் 1:8; 2:1, 4); அவரது சபை நிலைநாட்டப்பட்டது. பக்குவமடைந்துள்ள நாம், இந்த சத்தியங்களை ஏற்கனவே அறிந்துள்ள வைகளென்று சிலவேளைகளில் பெரியதாக எடுத்துக் கொள்ளா திருக்கின்றோம், ஆனால் இவைகளே நிலையான அகமகிழ்ச்சிக்குக் காரணமாய் இருக்கின்றன!*

### *வெற்றியின் ஆதாரமூலம் (வசனங்கள் 11, 12அ)*

*இது நம்மை, இவ்வசனப்பகுதியின் இருதயம் போன்ற மையப்பகுதியான 11ம் வசனத்தினிடம் கொண்டு வருகிறது. 11ம் வசனம், வெற்றியின் முதன்மை ஆதாரமூலத்தையும், அத்துடன் ஒரு துணை ஆதாரமூலத்தையும் குறிப்பிடுகிறது: "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" (வசனம் 11). "ஜெயித்தார்கள்" என்ற வார்த்தையானது ''ஜெயித்தவர்களாய் இருந்தனர்''*[31] *என்று அர்த்தப்படுகையில், ''ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம்'' என்பது ''தேவ ஆட்டுக்குட்டியானவரின் மீட்பளிக்கும் தியாகத்தின் சுருக்கமான வெளிப்பாடாக உள்ளது ... .''*[32]

*இவ்வசனப்பகுதி, மிகாவேல் மாபெரும் வீரனாக இருந்ததால் வெற்றி கிடைத்தது என்று கூறுவதில்லை. இவ்வசனப்பகுதி, கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த வல்லமையினாலும் பலத்தினாலும் சாத்தானை "வெற்றிகொண்டனர்" என்று போதிப்பதில்லை.*

*அவர்கள் தங்கள் உயர்வான எண்ணிக்கைகளினால் வெற்றி கொள்ளவில்லை, அவர்கள் பலரின் மத்தியில் வெகுசிலராக இருந்தனர். ... பரிசுத்தவான்கள் தங்கள் செல்வத்தினாலோ அல்லது தங்கள் உயர்வான சமூக நிலையினாலோ வெற்றி கொள்ளவில்லை. இவைகளில் எவற்றையும் அவர்கள் உடைமை கொண்டிருக்கவில்லை. அவர்கள் தங்கள் செல்வாக்கினால் வெற்றிகொள்ளவில்லை. ... அவர்கள் குகைகளிலும் சிறைகளிலும் இருந்து தங்களை வெளியே இருக்கும்படி காத்துக்கொள்வதற்கு, துன்புறுத்தப்படுதல் மற்றும் மரணம் ஆகியவற்றில் இருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்குப் போதுமான [செல்வாக்கை] கொண்டிருக்கவில்லை.*[33]

*மாறாக, "ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம்" தான் இந்த வெற்றிக்கு முதன்மையான ஆதாரமூலமாக இருந்தது. வலுசர்ப்பம் பூமியிலே தள்ளப்படுவது பற்றிய பிரையனின் சித்திரத்தைக் கவனமாகக் கண்ணோக்கும்போது, அதில் நீங்கள், மேகங்களின்மீது சிலுவையின் நிழல் இருப்பதைக் காண்பீர்கள்.*

*சமீபத்திய ஆண்டுகளில், நாமகரணக் கூட்டங்களில் சிலர் தங்கள் பாடல்புத்தகங்களில் இருந்து ''இரத்தம்'' என்ற வார்த்தையை நீக்கிப்போட்டனர், இவ்வார்த்தை "நவீன மனிதருக்கு அருவருப்பாக" இருப்பதால் இவ்வாறு அவர்கள் நீக்கிப்போட்டதாகக் கூறுகின்றனர். இருந்தபோதிலும், இயேசுவின் இரத்தத்தின் மூலமாகவே நமது இரட்சிப்பு ஏற்பட்டுள்ளது என்று வேதாகமம் இன்னமும் போதிக்கிறது.*

*நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபிரெயர் 9:14).*

*உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேதுரு 1:18, 19).*

*நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி (வெளிப்படுத்தின விசேஷம் 1:6அ).*

*நாம் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருந்து, அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் (முழுக்காட்டுதல்) பெறும்போது, இயேசுவின் இரத்தம் நமது பாவங்களைக் கழுவி அகற்றுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 7:14; நடபடிகள் 22:16) பின்பு நாம் அவரது வசனத்தின் வெளிச்சத்தில் தொடர்ந்து நடக்கும்போது, அந்த இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7).*

ஒவ்வொரு ஆண்டும், பல இலட்சக்கணக்கான மனிதர்கள் மாரடைப்பினால் கொல்லப்படுகின்றனர் என்று அறிக்கைகள் வருகின்றன. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் உண்மையில் ‘‘இரத்தத் தாக்குதல்களையே” கொண்டுள்ளனர். ஏதோ ஒரு காரணத்தினால் இரத்தம் இருதயத்திற்கோ, சிறுநீரகங்களுக்கோ, நுரையீரல்களுக்கோ அல்லது மூளைக்கோ செல்ல முடியாமல் போகிறது. நமது அத்தியாவசியமான உறுப்புக்களுக்குச் சீரான இரத்த ஓட்டம் இருக்க வேண்டும், இல்லையென்றால் நாம் இறந்துவிடுவோம். அதுபோலவே நமது ஆத்துமாக்கள் கிறிஸ்துவுடன் என்றென்றைக்கும் வாழவேண்டுமென்றால், அவைகள் கிறிஸ்துவின் இரத்த ஓட்டத்தினால் தொடர்ந்து சுத்திகரிக்கப்பட வேண்டும்![34] கல்வாரியானது பிசாசுக்கு மரண அடியாக இருந்திருக்கலாம்; ஆனால் அது நமது உயிரோட்டமாக உள்ளது.[35]

இயேசுவின் இரத்தத்திஞல் இரட்சிக்கப்படுதல் என்றால் என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, பின்வருவன போன்ற வார்த்தைகள் விசேஷித்த அர்த்தம் கொள்கின்றன:

*என் பாவங்கள் - பகுதியாய் அல்ல, ஆனால்-*
*அனைத்தும் சிலுவையில் அறையப்பட்டது*
*இனி நான் அதை சுமப்பதில்லை என்ற*
*இந்த மகிமையின் ஆசீர்வாதத்தை நினைக்கையில்*
*என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி கர்த்தரை ஸ்தோத்திரி![36]*

11ம் வசனமும் வெற்றிக்கான துணை ஆதாரமூலம் ஒன்றைக் கொடுக்கிறது: கீழ்ப்படிதல் மூலமாக சிலுவைக்கு மனிதனின் ஏற்புடைய செய்கை.[37] இயேசு எல்லாருக்காகவும் மரித்தார் (2 கொரிந்தியர் 5:15; தீத்து 2:11), ஆனால் எல்லாரும் இரட்சிக்கப்படமாட்டார்கள் (மத்தேயு 7:13, 14). கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட இரட்சிப்பை அனுகூலப்படுத்திக் கொள்வதா இல்லையா என்பதை ஒவ்வொரு தனிநபரும் தீர்மானித்தாக வேண்டும்.

11ம் வசனத்தில் உண்மையுள்ள கிறிஸ்தவர்களுடைய வாழ்வின் இரு அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன: (1) அவர்கள் கிறிஸ்துவுக்கான தங்களின் உறுதிப்பாட்டில் உண்மையுடன் இருந்தனர்: “தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை [சாத்தானை] ஜெயித்தார்கள்” (வசனம் 11ஆ). அவர்கள் இயேசுவைப் பிரசங்கிப்பதில் உண்மைநிறைந்தவர்களாய் இருந்தனர். “பிசாசானவன் தான் வெறுக்கின்ற எல்லா வரலாறுகளிலும், சுவிசேஷத்தை (மிகவும்) வெறுக்கின்றான். அவன் தான் உக்கிரகோபம் கொள்ளுகிற எல்லா பேச்சுக்களிலும், இயேசுவைப் பற்றிய பேச்சு அவனை மிகவும் உக்கிரமாக்குகிறது.’’[38] அத்துடன் கூடுதலாக, அவர்கள் இயேசுவுக்காக வாழ்வதில் உண்மை நிறைந்தவர்களாய் இருந்தனர். அவர்கள் “வலுசர்ப்பத்தினால் உருவாக்கப்படும் உலகத்தில் கிறிஸ்துவின் சாயலினால் உருவாக்கப்படும் வாழ்வை நடத்தினர்.’’[39]

(2) அவர்கள் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோதும் உண்மை நிறைந்தவர்களாய் இருந்தனர்: “மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல்” (வசனம் 11அ). இயேசு

*தமது சீஷர்களிடத்தில், "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்" என்று கூறியிருந்தார் (மாற்கு 8:35; யோவான் 12:24, 25ஐக் காணவும்). யோவான் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் வார்த்தைகளினுடைய ஆவியானது, பவுல் தமது நண்பர்களுக்கு எழுதிய பின்வரும் வார்த்தைகளில் விளக்கியுரைக்கப்பட்டது:*

> *... என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன் ... தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் (நடபடிகள் 20:24).*
>
> *... நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் (நடபடிகள் 21:13).*

*தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் உண்மைத்தன்மை பற்றி குளோவிஸ் சேப்பல் என்பவர் பின்வருமாறு கூறினார்:*

> *அவர்கள் வெற்றிக்கான விலையைச் செலுத்த மனவிருப்பத்துடன் இருந்ததால் வெற்றியை ஆதாயப்படுத்திக் கொண்டனர். அவர்கள் பேரம் பேசுதலை முயற்சி செய்யாது இருந்தபடியால் வெற்றி கொண்டனர். அவர்கள் நிபந்தனைகளைப் பற்றி விவாதிக்கவில்லை .... அவர்கள் விலையைப் பற்றிச் சச்சரவிடவில்லை .... வெற்றியடைவதற்கு அவர்கள், ஏதொன்றையும் எல்லாவற்றையும், தங்கள் உயிரையும்கூட ஒப்புக்கொடுக்கத் தயாராக இருக்கும் அளவுக்கு வெற்றியை மிகவும் மேன்மையானதாக மதித்ததால் வெற்றிகொண்டனர்.[40]*

*"நமது வேதவசனப்பகுதியானது, பரிசுத்தவான்கள் வேதசாட்சியாக மரிப்பதை நேசித்தனர் என்று கூறுவதில்லை. அது அவர்கள் 'தங்கள் உயிரை நேசிக்கவில்லை' என்றே கூறுகிறது. இது அவர்கள் மரணத்தை எவ்வாறு கண்ணோக்கினர் என்பது பற்றிய கலந்துரையாடலாயிருக்கவில்லை, ஆனால் அவர்கள் தங்கள் வாழ்வை எவ்வாறு கண்ணோக்கினர் என்பது பற்றிய கலந்துரையாடலாகவே இருந்தது!"[41] என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். சிலர் தங்கள் விசுவாசத்திற்காக மரித்திருக்கையில் மற்றவர்கள் அவ்வாறு மரித்திருக்கவில்லை, ஆனால் எல்லாரும் "வேதசாட்சிகளாக மரிக்கும் ஆவியை" கொண்டிருந்தனர்.[42] அவர்கள் தாங்கள் விசுவாசித்தவற்றிற்காக மரிப்பதற்கு மனவிருப்பத்துடன் இருந்தனர். அவர்கள் தங்கள் முன்னுரிமைகளை வகுத்திருந்தபடியால், பிசாசானவன் வெற்றிகொண்டு மேற்கொண்டதாகக் காணப்பட்ட வேளையே - அவன் அவர்களை கொலைசெய்த வேளையே - அவனது தோல்வி மற்றும் அவர்களின் வெற்றியின் வேளையாகக் காணப்பட்டது.[43]*

இவ்விதமாக [பரலோகத்தில் இருந்து வந்த] குரலானது, “பரலோகங்களே![44] அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூறுங்கள்” என்று கூறிற்று (வசனம் 12அ). இந்த வார்த்தைகள் அனேகமாக, ஏற்கனவே இந்தப் பூமியை விட்டுச் சென்றிருந்த கிறிஸ்தவர்களுக்குக் கூறப்பட்டிருக்கலாம். அவர்கள் இரத்தத்தினால் மீட்கப்பட்டிருந்தபடியாலும் அவர்கள் இப்போது வலுசர்ப்பத்திடமிருந்து பாதுகாப்பாக இருந்ததாலும் களிகூர முடிந்திருக்கும்.

## பிசாசினுடைய தோல்வியின் விளைவுகள் (12:12ஆ)

12ம் வசனத்தின் முடிவானது வெற்றியின் பாடலைத் தொடருகிறது, ஆனால் இது பிசாசின் தோல்வியினால் உண்டான வேதனைமிக்க விளைவு ஒன்றைப் பற்றிப் பேசுகிறது என்பதால் இதை நான் தனிமைப்படுத்தியுள்ளேன். இவனது தோல்வி களிகூருதலுக்கான காரணமாக மாத்திரம் இருக்கவில்லை; அது துக்கத்திற்கான/ புலம்புதலுக்கான தூண்டுதல் ஒன்றையும் அளிக்கிறது. வலுசர்ப்பம் தோற்கடிக்கப்பட்டது ஆனால் அது அழிக்கப்படவில்லை, மற்றும் தோல்வியடைந்த வலுசர்ப்பம் மகிழ்ச்சியற்ற வலுசர்ப்பமாக உள்ளது. வெடிக்கும் நிலையடையும் வரையிலும் இவனது கோபம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருந்தது. இவன் யார் மீதாவது - எவர்மீதாவது - தனது உக்கிரத்தைச் செலவிடத் தயாராக இருந்தான்.

ஆகையால் (பரலோகத்தில் இருந்து வந்த) குரல், ‘‘பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் ... மிகுந்த கோபங்கொண்டு. உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும்’’ என்று எச்சரித்தது (வசனம் 12ஆ). ‘‘பூமியிலும் சமுத்திரத்திலும்’’ என்பது பிசாசின் செல்வாக்குள்ள வட்டத்தைக் குறிப்பிடுகிறது.[45] “ ‘பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்கள்’ கவலைகொள்ளக் காரணம் கொண்டிருந்தனர், ஏனெனில் அவர்களைப் பிசாசு தனது சொந்த முடிவுக்குப் பயன்படுத்திக் கொள்வான் மற்றும் அவன் அவர்களின் நலனைப் பற்றி அக்கறை கொள்ளமாட்டான்.”[46]

வலுசர்ப்பம், தனக்கு ‘‘கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று’’ அறிந்திருந்தது இவனது “மிகுந்த கோபத்திற்கு” ஒரு காரணமாக உள்ளது (12:12இ). “இவனது நாட்கள் எண்ணப்பட்டுள்ளன.”[47] இவன் தனக்குக் காத்திருக்கும் முடிவை அறிந்துள்ளான் (20:10). அந்த வேளையில் இவன், கர்த்தரைப் பின்பற்றுபவர்கள் மீது இயன்ற அளவுக்கு அதிக வேதனையையும் உபத்திரவத்தையும் கொடுக்கத் தீர்மானம் செய்தான்.

காயமடைந்த மிருகங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பது நான் ஒரு சிறுவனாக இருந்தபோது பெற்றுக்கொண்ட அறிவுரைத் துணுக்காக இருந்தது. காயமடைந்த மிருகம் யாரையும் எதையும் தாக்கும். 12ம் அதிகாரத்தின் முடிவில், வலுசர்ப்பம் காயமடைந்த மிருகமாக உள்ளது, அதுவே அம்மிருகம் மிகவும் அபாயமானதாவதற்குக்

காரணமாயிருக்கிறது. இவ்விதமாக, லியோன் மோரீஸ் என்பவர், "சாத்தான் மிகவும் பலசாலியாய் இருந்தான் என்பதால் அல்ல, ஆனால் அவன் அடிக்கப்பட்டிருந்தான் என்பதாலேயே நீதிமான்களின் துன்புறுதல் எழும்பிற்று'' என்று எழுதினார்.[48] தேவனுடைய மக்கள்மீது இவனது அக்கிரமத்தின் செயல்கள் "வெற்றிகொள்ளப்பட்ட விரோதியின் கடைசித் திணறலான தாக்குதல்களாக உள்ளன."[49]

இவையாவும், பிசாசானவன் ஏன் இவ்வளவு கோபமாக இருக்கின்றான் என்பதையும், கிறிஸ்தவர்களைத் தாக்குவதற்கு அவன் என் இவ்வளவு அதிகமாகச் சாய்கின்றான் என்பதையும் விளக்கப்படுத்துகின்றன. இவ்வரலாற்றின் எஞ்சிய (மற்றும் கடைசிப்) பகுதி, 12ம் அதிகாரத்தின் மீதான நமது அடுத்த பாடத்தில் கூறப்படும்.

## முடிவுரை

பிசாசின் தலையை நசுக்குவதற்கு இயேசுவுக்கு வல்லமையளித்த அதே தேவன் ''சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்" (ரோமர் 16:20). 11ம் வசனத்தில் உள்ளவர்கள் போல், விலையைச் செலுத்த நீங்கள் மனவிருப்பமாய் இருந்தால், இயேசுவின் மூலமாய்க் கர்த்தர் உங்களுக்கு வெற்றியைக் கொடுப்பார்.

விசேஷித்த வீரர்களுடன் ஆலோசனை நடத்த ஒரு பெரிய வட்ட மேஜையைக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஆர்தர் என்ற அரசனைப் பற்றிய கதையானது ஆங்கிலத்தில் நன்கு அறியப்பட்ட புராணங்களில் ஒன்றாக உள்ளது. நெருப்பைச் சுவாசித்து, நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருந்த வலுசர்ப்பங்களைக் கொல்லுதல் என்பது அவர் தமது யுத்த வீரர்களுக்கு கொடுத்த ஒரு பணிப்பொறுப்பாக இருந்தது. அந்தப் புராணத்தில், பல வீரர்கள் மாபெரும் "வலுசர்ப்பக் கொலையாளிகள்" என்ற வகையில் புகழ் பெற்றிருந்தனர். நீங்களும் நானும் ''வலுசர்ப்பத்தைக் கொல்பவர்கள்'' என்ற வரலாற்றுப் புகழை ஒருக்காலும் பெறப்போவதில்லை; ஆனால் 12ம் அதிகாரத்தின்படி, நாம் "சாட்சியைக் கைக்கொள்வதினால்'' மற்றும் ''மரணம் நேர்ந்தாலும்'' நமது உயிரை நேசிக்காது இருப்பதினால் ''பெரிய சிகப்பான வலுசர்ப்பத்தை'' தோல்வியுறச் செய்வதில் நாம் வலிவார்ந்த பணியாற்றுபவர்களாய் இருக்கின்றோம்.

மீண்டும் ஒரு முறை, இது சுயபரிசோதனைக்கான வேளையாக உள்ளது. பின்வரும் கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்வோம்: ''வசனத்தைப் பிரசங்கிப்பதில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றோமா?''; ''வசனத்தின்படி வாழ்வதில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றோமா?"; "நமது வாழ்வில் முன்னுரிமைகளை வகுத்திருக்கின்றோமா?"; "நமது விசுவாசத்திற்காக மரிக்க நாம் தயாராக இருப்போமா?"[50]

# போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*“பரலோகத்தில் யுத்தம்” என்பது இந்த வசனப்பகுதிக்குப் பொதுவான தலைப்பாக உள்ளது. மையர் பேர்ல்மேன் என்பவர் இந்தத் தலைப்பை, “பரலோகத்தில் யுத்தம் - பூமியில் சாபம்” என்று விரிவாக்கம் செய்தார். “ வெற்றியின் இரகசியம்” என்பது சாத்தியமான இன்னொரு தலைப்பாக உள்ளது. ஆல்பர்ட் பால்டிங்கர் என்பவர், “பரிசுத்த யுத்தம்” என்று தலைப்பிட்டார். நீங்கள் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தினால், 12ம் அதிகாரத்தின் யுத்தத்தை, பூமியின்மீது, “பரிசுத்த யுத்தங்கள்” என்று அழைக்கப்படும் யுத்தங்களுடன் நேர்மாறாக ஒப்பிட்டுத் தொடங்க முடியும்.*

*இரத்தத்தின் மூலம் இரட்சிப்பு என்பது மிகமேன்மையான ஒரு துணைப் பிரசங்கமாக இருக்கும். இந்தப் பிரசங்கம், தேவனுடைய திட்டத்தில் ஆதியில் இருந்தே இரத்தத்தின் பயன்பாடு, சிலுவையில் இயேசு நமக்காகத் செய்தது என்ன, மற்றும் இரத்தத்தின் மூலம் நாம் எவ்வாறு பயனடைகின்றோம் என்பவற்றின் மீது கவனம் குவிக்க முடியும். “சிலுவையின் பாதை இல்லத்திற்கு வழிநடத்துகிறது” என்பது இதற்குச் சாத்தியமான ஒரு தலைப்பாக இருக்கும். நீங்கள் இந்தக் கருத்தைப் பயன்படுத்தினால், ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி மற்றும் ஆகியவற்றுடன் கிறிஸ்துவின் இரத்தத்தின் உறவைப் பற்றி விளக்கப்படுத்துவதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]This illustration was adapted from Paul Lee Tan, *Encyclopedia of 7700 Illustrations* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1574. [2]*நமது முந்திய பாடத்தில் நாம், 1 மற்றும் 3 வசனங்களில் “வானம்” என்பது ஆகாயத்தைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவித்தோம். 7முதல் 9வரையுள்ள வசனங்களில், “வானம்” என்பது அனேகமாக தேவனுடைய விசேஷித்த வாசஸ்தலத்தைக் குறிப்பிடலாம். இருப்பினும் இது ஒரு அடையாளத்துவமாக உள்ளது என்பதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.* [3]This sentence was adapted from Robert Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 238. [4]H. L. Ellison, *1 Peter-Revelation,* Scripture Union Bible Study Books Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 67. [5]*ஜான் மில்ட்டன் என்பவர் 1608-74ல் வாழ்ந்த ஒரு ஆங்கிலக் கவிஞர் ஆவார். அவரது மிகப்பிரபலமான Paradise Lost* (1667*ல் எழுதப்பட்டது) என்ற புத்தகம் உலகத்தின் மாபெரும் காவியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.* [6]Ellison, 67. [7]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 172-73. [8]*இவ்வசனப்பகுதியின் சந்தர்ப்பப்பொருள், இது பாபிலோனின் அரசனைப் பற்றிப் பேசுகிறதைத் தெளிவாக்கினாலும் கூட (ஏசாயா 14:4ஐக் காணவும்), பிசாசின் தோற்றம் பற்றிய வசனப்பகுதிகளின் பட்டியலில் லூசிபேரைப் பற்றிய வசனப்பகுதியைப் பல*

எழுத்தாளர்கள் கூட்டுகின்றனர் (ஏசாயா 14:12). இவ்வசனப்பகுதியானது பாபிலோனின் அரசனுக்கு ஒப்பனையாக உள்ளது என்பதை மறுக்கின்றனர், "ஆகையால் இது சாத்தானைப் போன்ற வகையின் அரசனைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும்" என்று கூறுகின்றனர். அவர்கள், கவிதை மொழியின் இயல்பைப் புறக்கணித்து, இது சாத்தானின் எதிர் மாதிரியாக உள்ளது என்று மேலோட்டமாக முடிவு செய்கின்றனர். இப்பகுதியில் பரிசுத்த ஆவியானவர் தமது சிந்தையில் சாத்தானைப் பற்றிய எண்ணம் கொண்டிருந்தார் என்று சந்தர்ப்பப்பொருளில் எதுவும் சுட்டிக்காண்பிப்பதில்லை. லூக்கா 10:18 என்பது இந்தப் பட்டியலுடன் அடிக்கடி சேர்க்கப்படுகிற இன்னொரு வசனப்பகுதியாக உள்ளது. [9]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 102. [10]G. R. Beasley-Murray, *The Book of Revelation,* The New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 203.

[11]பிரதான தூதனைப் பற்றிய இன்னொரு குறிப்பு 1 தெசலோனிக்கேயர் 4:16ல் உள்ளது. ஆனால் அந்தப் பிரதான தூதனுக்குப் பெயர் குறிப்பிடப்படவில்லை. அந்தக்குறிப்பு மிகாவேலைப் பற்றியது என்று சிலர் நினைக்கின்றனர். [12]யூதா 9ம் வசனம் ஒருவேளை, யூதா நிருபத்தின் மிகவும் கடினமான வசனமாயிருக்கலாம். உபாகமம் 34:6ல் மோசேயின் சரீரம் அடக்கம் செய்தல் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது, ஆனால் அவ்விடத்தில் மிகாவேலுக்கும் பிசாசுக்கும் இடையிலான தர்க்கம் பற்றி ஒன்றும் கூறப்படுவதில்லை. யூதா இதை எழுதியதற்கான ஆதாரமூலத்தை, ஏவுதல் பெற்றிராத புத்தகங்களில் இருந்து கண்டறிவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, ஆனால் தேவனுடைய ஆவியானவரே யூதாவின் ஆதாரமூலமாக இருந்தார். மிகாவேலுக்கும் பிசாசுக்கும் இடையில் ஒரு தர்க்கம் ஏற்பட்டது என்பதை (தர்க்கம் பற்றிய விபரம் எதையும் அறியாமல்) நாம் யூதா 9ல் இருந்து அறிகின்றோம்; ஆனால் மிகாவேலின் பேச்சு தடைப்படுத்தப்பட்டது என்று நாம் அறிவதுதான் மிகமுக்கியமானதாக (இதுவே இவ்வசனத்தின் பிரதான கருத்தாக உள்ளது) உள்ளது. [13]சிலர், "இங்கு வேறே எவருமின்றி, ஒரு வேளை இயேசுவே கூட இன்றி, மிகாவேல் ஏன் குறிப்பிடப்பட்டுள்ளார்?" என்று கேட்கின்றனர். இப்படிப்பட்ட விபரங்கள் நம்மைக் கவலைப்படுத்தக்கூடாது. இது ஒரு அடையாளத்துவமாக உள்ளது, இது நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான யுத்தத்தைச் சித்தரிக்கிறது. [14]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 165. [15]"அவள் வித்து" என்பது ஏவாளின் எல்லாச் சந்ததிகளையும் குறிப்பிடுவதாக இருக்கக்கூடும், ஆனுல் இது இவ்வசனத்தில் தொடர்ந்து வருகிற "அவர்" என்ற ஒருமைப் பெயர்சொல்லால் தகுதிப்படுத்தப்படுகிறது. இவ்விதமாக, "அவள் வித்து" என்ற சொற்றொடர் அவளது சந்ததிகளில் ஒரே ஒருவரையே குறிப்பிடுகிறது. இது இயேசுவையே திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது. [16]சிலுவையில் (இயேசுவின்) மரணம் என்பதை "காலை" நசுக்குதல் (மேலோட்டமான ஒரு காயம்) என்று உயிர்த்தெழுதல் நிரூபித்தது. [17]John R. W. Stott, *The Letters of John*, rev. ed., Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 142. ஸ்டாட் என்பவர் தமது கூற்றிற்கு ஆதாரமாக யோவான் 12:23, 27, 31, 32; 16:11 ஆகிய வசனங்களைப் பயன்படுத்தினார். லூக்கா 10:18, இயேசுவின் ஊழியத்தினால் சாத்தான் தூக்கியெறியப்படுதலைக் குறிப்பிடும் இன்னொரு வசனப்பகுதியாக உள்ளது. இதில் சாத்தான் "வானத்தில் இருந்து" விழுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. லூக்கா 10:18 வசனம் வெளிப்படுத்தின விசேஷம் 12:7-10ல் உள்ள அதே மொழிநடையைப் பயன்படுத்துகிறபடியால், இவ்விரு

*வசனப்பகுதிகளும் அடிக்கடி பிணைக்கப்படுகின்றன, இது (லூக்கா 10:18). சீஷர்கள் அசுத்த ஆவிகளைத் துரத்த வல்லமை பெற்றபோது, மனிதர்கள்மீது சாத்தான் கொண்டிருந்த வல்லமை குறைக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 20:1-3ல் சாத்தான் "கட்டிவைக்கப்படுதல்" தொடர்பாக லூக்கா 10:18 வசனம் இன்னும் விபரமாக கலந்துரையாடப்படும்.* [18]The first part of this sentence is adapted from Martin H. Franzmann, *The Revelation to John* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1976), 87. [19]The last of this sentence was adapted from Merrill C. Tenney, *Proclaiming the New Testament*: *The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 62. [20]This sentence was adapted from Roberts, 102.

[21]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 273. [22]See William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 83. [23]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 155. [24]Roberts, 102. [25]Mounce, 243. [26]Beasley-Murray, 202. [27]Ellison, 67. [28]*இவ்வசனத்திற்கான விளக்கத்திற்கு, இதற்கு முந்திய பாடத்தை, அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள் உட்படக் காணவும்.* [29]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 157. [30]*வசனம் 10ல் "நமது" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது; யோவான் பன்மைக் குரல்களைக் கேட்டார்.*

[31]*"ஜெயித்தார்கள்" என்ற வார்த்தை "வெற்றி" என்பதற்கான கிரேக்க வார்த்தையான nike என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 1 என்ற புத்தகத்தில் உள்ள, "நாம் ஜெயம்கொண்டோம்! தேவனுக்கு நன்றி!" என்ற பாடத்தில் nikao என்ற வினைவடிவத்திற்கான குறிப்புகளைக் காணவும்.* [32]Beasley-Murray, 203. [33]Clovis G. Chappell, *Sermons From Revelation* (NewYork: Abingdon Press, 1943), 177. [34]This illustration was adapted from John Stacy, *Preaching Through Revelation* (Winona, Miss.: J. C. Choate Publications, 1983), 116. [35]This sentence was adapted from Myer Pearlman, *Windows Into the Future: Devotional Studies in the Book of Revelation* (Springfield Mo.: Gospel Publishing House, 1941), 106. [36]H. G. Spafford, "It Is Well With My Soul," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [37]*இரட்சிக்கப்படுகின்றவர்கள் "தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்றனர்" என்று குறிப்பிடும் 12:17ஐக் காணவும்.* [38]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources (1976), 177. [39]M. Robert Mulholland, Jr., *Revelation: Holy Living in an Unholy World*, Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland, Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press), 222. [40]Chappell, 179.

[41]McGuiggan, 180. [42]Hailey, 276. [43]The last part of this sentence was adapted from Philip E. Hughes, *The Book of the Revelation*: *A Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 140. [44]*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே "பரலோகங்கள்" என்ற பன்மை வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்ற எல்லா இடங்களிலும் ஒருமை வார்த்தை இருக்கையில், இங்கு பன்மை வார்த்தை பயன்படுத்தப்பட்டது ஏன் என்பதை ஒருவராலும் நிச்சயமாய்க் கூற இயலவில்லை. அனேகமாக இது முக்கியத்துவமற்ற விபரமாயிருக்கலாம்.* [45]*சந்தர்ப்பப் பொருளில், பூமி என்பது நாம் வாழுகின்ற கோளாக உள்ளது (12:16ஐக் காணவும்).* [46]McGuiggan, 181. [47]Beasley-Murray, 202. *"தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று" என்ற சொற்றொடர் அனேகமாக,*

*கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துதலை அர்த்தப்படுத்தலாம்: பிசாசானவன் அவர்களை "கொஞ்சக் காலம்" மாத்திரமே துன்புறுத்த முடியும்.* [48]Morris, 158. [49]T. F. Glasson, *The Revelation of John*, The Cambridge Bible Commentary on the New English Bible Series (Cambridge, England: Cambridge University Press, 1965), 75. [50]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், உங்கள் உரையைக் கேட்பவர் ஒவ்வொருவரும், தம்மையே பரிசோதித்து அறியும்படியும் பின்பு அவர், கர்த்தருடனான தமது உறவை மேம்படுத்த என்னவெல்லாம் செய்யவேண்டுமோ, அவற்றைச் செய்யும்படியும் உற்சாகமூட்டுங்கள். கர்த்தருடைய வருகைக்கு எப்படி ஆயத்தமாய் இருப்பது என்பதை உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு கூற, ஒருவர் கிறிஸ்தவராவது எப்படி என்பதையும் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; கலாத்தியர் 3:26, 27) மற்றும் தேவனுடைய பிள்ளையாய் இருந்து தவறு செய்கின்றவர் மீளக்கட்டுவிக்கப்படுதல் எப்படி என்பதையும் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16; 1 யோவான் 1:9) ஞாபகப்படுத்த நீங்கள் விரும்பலாம்.*

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *இந்தப் பாடம், 12:7-12 வசனப்பகுதியானது மனிதன் படைக்கப்படுவதற்கு முன்பு சாத்தானின் வீழ்ச்சி நடந்தது என்று போதிப்பதில்லை என்பதாக வலியுறுத்துவது ஏன்? நீங்கள் இந்தக் கூற்றை ஒப்புக்கொள்கின்றீர்களா? அல்லது மறுக்கின்றீர்களா?*
2. *சாத்தானின் தோற்றம் பற்றி வேதாகமம் நமக்குக் கூறுவது என்ன? நாம் இதைவிட அதிகமானவற்றை அறிய விரும்பலாம், ஆனால் நாம் அறிய அவசியமானதெல்லாம் இதுதானா?*
3. *இந்தப் பாடத்தின்படி, 7முதல் 9வரையுள்ள வசனங்களின் யுத்தம் எப்போது நடைபெற்றது?*
4. *நமது பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிகாவேலைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?*
5. *ஆதியாகமம் 3:15ல் தரப்பட்ட வாக்குத்தத்தத்தையும் அதன் நிறைவேற்றத்தையும் பற்றிக் கலந்துரையாடுக.*
6. *இயேசு சிலுவையில் மரித்தபோது, சாத்தான் தோற்கடிக்கப் பட்டான் என்று போதிக்கும் வேதவசன பகுதிகள் சிலவற்றைப் பட்டியலிடவும்.*
7. *மனிதகுலத்தின்மீது சாத்தான் கொண்டிருந்த இறுக்கமான பிடியை, சிலுவை எவ்வாறு உடைத்தது? அது மனிதர்களைச் சாத்தான் வஞ்சப்பதை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவந்தது? தேவனுடைய உண்மையான பின்பற்றாளர்களை அவன் குற்றஞ்சுமத்துவதிலிருந்து, எப்படி அவனைத் தடுத்து நிறுத்திற்று?*
8. *10ம் வசனத்தில் பட்டியலிடப்பட்டுள்ளபடி, "இரட்சிப்பு," "வல்லமை," "இராஜ்யம்," மற்றும் "அதிகாரம்" என்ற சொற்றொடர் களைப் பற்றிக் கலந்துரையாடவும்.*

9. *இயேசுவின் இரத்தத்தினால் நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்று போதிக்கும் வசனப்பகுதிகளைப் பட்டியலிடவும். உங்களுக்காக இயேசு சிலுவையில் நிறைவேற்றிய செயலை நீங்கள் பாராட்டுகிறீர்களா?*
10. *சாத்தானின் தொடர்ச்சியான தோல்வியில் மனிதனின் பங்கைப் பற்றிக் கலந்துரையாடவும். "தங்கள் சாட்சியின் வசனத்தினாலும்" மற்றும் "தங்கள் ஜீவனையும் பாராமல்" என்ற சொற்றொடர்களை விளக்கப்படுத்தவும்.*
11. *சாத்தானின் தோல்விக்கு அவனது பதில் செயல் என்னவாக இருந்தது? அவன் "மிகுந்த கோபம்" கொண்டது ஏன்?*
12. *காயமடைந்த மிருகம் எவ்வளவு அபாயகரமானதாக உள்ளது என்பதை இந்தப் பாடம் குறிப்பிடுகிறது. காயமடைந்த மிருகத்தைச் சந்தித்த அனுபவத்தை நீங்கள் எப்போதாவது பெற்றதுண்டா? இந்த விவரிப்பு சாத்தானுக்கு நடைமுறைப்படுத்தப்படுவது எவ்வாறு?*



*மிகாவேல், பெரிய வலுசர்ப்பத்தைப்*
*பூமியில் தள்ளுதல் (12:7-9)*